Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

11

# கொன்னக்கோல் - அன்றும் – இன்றும்

முனைவர் M. ரமேஷ்பாபு M.A (Music) Ph.D
மிருதங்க ஆசிரியர், மகாத்மா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மதுரை.

**ஆய்வு சுருக்கம்:**

கொன்னக்கோலின் வளர்ச்சி பற்றியும் கொன்னக்கோல் இசைக்கும் முறையை பற்றியும் மேலும் நட்டுவாங்கத்தில் கொன்னக்கோல் பற்றியும் மற்றும் தனிஆவர்தனம். கொன்னக்கோலின் முந்தைய நிலை பற்றியும் தற்போதைய கொன்னக்கோல் நிலை பற்றியும் பிற்கால சந்ததிகள் தெரிந்து கொள்ளும் வகையில் ஆய்வு சுருக்கமாக கொடுத்துள்ளேன்.

**திறவுச் சொற்கள்:-**

தாளம், கொன்னக்கோல், கொனிப்பித்தால், சந்தம், லயம், சொற்கட்டுக்கள்

**முன்னுரை:-**

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழில் இசை இயலுக்கும் நாடகத்திற்கும் பொதுவானதாக நடுவில் சொல்லப்பட்டுள்ளது இயலில் இசையை பொருத்தி பாடல் புனையும் போது அப்பாடல் தன்னகத்தே லய அமைப்பை பெறுகின்றது. பொதுவாக பண்ணும். பாணியும் ராகத்தையும் தாளத்தையும் குறிப்பன. தாளம் என்பது தாள் + அம் என்று பிரித்து தாளமானது. தன்னுடைய உடம்பின் பெரும்பாகம் கால் தாங்கி உள்ளது என்று திருமுறையில் திருஞானசம்பந்தர் குறித்திருக்கிறார். திருஞானசம்பந்தர் அவர்கள் தான் முதன் முதலில் அவருடைய தேவாரத்தில் தக்காரம் அமைத்து பாடியுள்ளார் அதனால் தான் அவருக்கு தாளசதுரர் என்ற மற்றொரு பெயருமுண்டு இவருக்கு பிறகு திருப்புகழை பாடிய அருணகிரிநாதர் அவர்கள் சந்தங்களோடு நிறைய பாடல்களை அமைத்துள்ளார். அதனால் தான் அவருக்கு சந்தபாவல புலவர் என்ற பெயரும் அமைந்தது. அதுபோல திருப்புகழின் சந்தங்களின் வரும் லய கணக்குகளை வைத்து சொற்க்கட்டுக்கள் உருவாகியுள்ளன. இந்த சொற்க்கட்டுகள் தான் பிற்காலத்தில் தத்தக்காரமாகி கொன்னக்கோல் உருவாக காரணமாகி இருக்க வேண்டும் என்று கொன்னக்கோல் வித்வான் தாயுமானவர் அவர்கள் கூறியிருக்கிறார்.

**கொன்னக்கோலின் வளர்ச்சி:**

வேத சாஸ்த்ரங்களுக்கும் மூல காரணமாக இருப்பது மஹா ஶ்ரீ காயத்ரி மந்திரம் இம் மஹா காயத்ரி மந்திரத்தின் முதல் சொல்லே 'த' அதேபோல் ஶ்ரீமத் வால்மிகி இராமாயணத்தின் முதல் சொல்லே த பகவத்கீதையின் முதல் சொல்லே "த" விலிருந்து துவங்குவதை உணர்ந்த லய மேதைகள் வேதத்திற்கும் லயத்திற்கும் உள்ள தொடர்பை அறிவியல் வழியில் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

தா தி தொம் நம் என்ற சொல்லின் துவக்கும் கொன்னக்கோல் வழியில் லய சொற்க்களை கொனுப்பி வெளிப்படுத்துவதில் பல லய மேதைகள் உள்ளனர்.

திருஞானசம்பந்தர் அவர்கள் தேவாரத்தில் தத்தக்காரம் அமைத்து பாடியுள்ளார். இவருக்கு தாள சதுரர் என்ற பெயருமுண்டு.

திருஞானசம்பந்தர் பழம் பஞ்சுரத்தில் அருளிய திருவியமக பதிகத்தில் சந்த அமைப்பு இவ்வாறாக உள்ளது. இது ஆதிதாளத்தில் 3 மாத்திரை தள்ளி (தகிட) அமைந்துள்ளது. இது மத்திம காலத்தில் ஒருமுறை பாடிய பிறகு அதையே துரித காலத்திலும் பாடுவர். துரித காலத்தில் சமத்திலிருந்து ஆரம்பித்து சமத்தில் முடியுமாறு பாடுவர்.

(உ.ம்)

த தொம் தகதிமி தொகு த தொம் தா

தகிடத் தொம் தகதிமி தொம் த தொம் தா
உற்றுமை சேர்வது மெய்யினயே
உணர்வது நின்னருள் மெய்யினயே

திருஞானசம்பந்தர்.

**திருப்புகழ் சந்தங்களில் கொன்னக்கோல்:-**

கொன்னக்கோல் என்ற சொல் வாயல் சொற்க்கட்டுக்களை கொனுப்பித்தல் மூலமாக மருவி கொன்னக்கோல் என வழக்கத்தில் கூறப்படுகின்றது. கொன்னக்கோலுக்கு முதன் முதலில் பாதையை போட்டவர் திருப்புகழ் இயற்றிய அருணகிரி நாதர் என்று கொன்னக்கோல் வித்வான் தாயுமாணவர் அவர்கள் கூறுகிறார்.

1. தன தன தந்தன
   டுடு டுடு டுடுடு
   2. கெக கன அகரமுமாகி

**குருகுல வாசத்தில் கொன்னக்கோல்**

குரு இல்லாத வித்தை பாழ் என்பது பழமொழி. கலையில் உள்ளவர்கள் தங்களுடைய மாணவர்களுக்கு கலைகளை கற்பித்துக் கொடுப்பது பண்டையகால வழக்கம். அதனை குருகுல வாசம் என்பார்கள். பண்டைய காலத்தில் குருகுல வாசம் செய்து வித்தைகளை சரிவர கற்றல் கேட்டல் மூலமாக தங்கள் கலைகளை வளர்த்துக் கொண்டார்கள். அந்த வகையில் கொன்னக்கோல் என்பது அந்த காலத்தில் இருந்தே வழக்கத்தில் இருந்து வருகிறது. அந்த காலத்தில் இசையை குருகுலமாகத்தான் கற்க முடியும் இதற்க்கென்று பள்ளியோ , கல்லூரியோ கிடையாது. குருகுலம் என்பது மிகவும் பழமையான ஒன்றாகும். குருவின் இல்லத்திலேயே தங்கிக் கொண்டு பல வருடங்களாக வாத்தியங்களை கற்று வந்த மரபு தான் இந்த குருகுலம். அந்த காலத்தில் உள்ள பெரிய வித்வான்கள் எல்லாம் இந்த குருகுல முறையில் தான் வாத்தியங்களை கற்று வந்துள்ளனர். இந்த வகையில் கொன்னக்கோலும் ஒன்று அந்த காலத்தில் குருகுல முறையில் படிக்கும் போது முதலில் கையில் தாளம் போட்டு சொல்லி அந்த சொற்களெல்லாம் கையில் நன்கு சொல்லி பழகிய பிறகு தான் வாத்தியங்களில் வாசிக்க முடியும்.

**கொன்னக்கோல் இசைக்கும் முறை:**

மிருதங்க வித்வான்களைப் போல அந்த காலத்தில் கொன்னக்கோல் வித்வான்களும் இருந்துள்ளனர். இவர்கள் கச்சேரியில் பாடகருக்கு வலது பக்கம் அதாவது மிருதங்க கலைஞருக்கு முன்பு கொன்னக்கோல் கலைஞர் அமர்ந்திருப்பார். அதாவது கொன்னக்கோல் கலைஞருக்கு அடுத்து தான் மிருதங்க கலைஞர் அமர்ந்திருப்பார். அந்த காலத்தில் கொன்னக்கோல் வித்வான்களுக்கும் மிருதங்கம் நன்றாக வாசிக்கத் தெரிந்திருந்தது. கொன்னக்கோல் வித்வான்களுக்கு ஸ்ருதி ஞானம் , ஸ்வர ஞானம் , சாஹித்ய ஞானம் , தாள ஞானம் ஆகிய அனைத்தும் இருந்தது. கொன்னக்கோல் என்பது தாள வாத்தியக்கருவிகளின் வெவ்வேறு மாறுபட்ட ஒலி நயத்தினை ஒத்து அமைதல் வேண்டும். பொதுவாக தோம் என்பது தாள வாத்ய தாய் சொற்க்களில் ஒன்றாகும். இதனை நன்கு கம்பீரத்துடன் சம ஸ்ருதிக்கு கீழ் ஷட்ஜத்துடன் கூடி ஒலித்திட வேண்டும். தலாங்கு, ப்ளாங்கு போன்ற சொற்க்கள் இனிய நாதமாக மேற்சொன்ன சுரங்களுடன் கூடி அமைதல் வேண்டும்.

**கொன்னக்கோலும் நட்டுவாங்கமும்:**

கொன்னக்கோல் என்றால் காலம் என்றும் கோல் என்றும் அம்பு என்றும் பொருளாகும். அதாவது பெருமை மிகுந்த கால ப்ரமாணத்தோடு கூடிய அம்பு போன்று விரைந்து செயலாற்றுகின்ற சொற்க்களை சொல்கின்ற பணி என்பதாகும். கொனிக்கிறது என்றால் சொல்வது த்வனித்தல் என்ற

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பொருளையும் தரும். இங்கு கோல் என்றால் எழுத்துக்கள் ஓசை நயம் மிக்கச் சொல் என்பதால் இதனை கொன்னக்கோல் என்கிறார்கள். இந்த கொன்னக்கோலின் அடிப்படையில் நட்டு வாங்க ஜதிகள் சொல்லப்படுகின்றன.

பன்னிரு சடத்தும் பட்டன் பட்டிக்
கூடி ஒன்று ஆகக் கோட்டது கோப்பு.

**கொன்னக்கோல் பயன்படுத்தபடும் கோர்வை ஜதிகளில் வரும் சொற்க்கள்:**

1. தொம் – நம் தொம். கிணதொம் திங்கிணதொம்
   ததிங்கிணதொம். தததிங்கிணதொம் தகததிங்கிணதொம்
   கிணதொம் ததிங்கிணதொம் – தீங்கிணதொம்.
2. தத் தித் தொம் நம் ஜெம், நம் கிடதக தரிகிண தரி
   கும்ஜம் ஹம்மில மகண – யகண – சகண – தகண
   ஜகண – பகண – ககண.
3. த, தக, தகிட தகதகிட குரு, ஜொம், தரிகிட
   திரிகிட தித்தரிகிட தித்தாம் தித்தை தொங்கிட
   நங்கிட ஜெணுதக தகுந்தரி தணுத ஜெணுத
   ததிமித தணு தகுந்த நம்தரி தீணம் தானம்
   தாரி தில்லான்னா தீத்தாம்.

**மிருதங்கத்தில் கொன்னக்கோல்:**

மிருதங்கத்திற்கு கொன்னக்கோல் சொல்லும் வழக்கம் அந்த காலத்தில் இருந்தே வழக்கத்தில் இருந்து வருகிறது. பொதுவாக கொன்னக்கோல் என்பது வாயால் சொற்க்கட்டுக்களை கொனிப்பிப்பதற்கு கொன்னக்கோல் என்று பெயர். இந்த கொன்னக்கோல் என்பது ஜதிகளை வாயால் பாடி பாட்டினை வழி நடத்தி செல்வர் இதில் சொற்க்கட்டுக்களை விட்டு விட்டு கொனிப்பதால் இது கொனிப்பித்தல் என்று வழங்கி இன்று கொன்னக்கோல் என்று மருவி வழங்கி இருக்கலாம் என்று கருத தோன்றுகிறது. கொன்னக்கோல் என்பது தாள சொற்க்களை புலப்படுத்தும் ஒரு சிறந்த வாயிலாக விளங்குகின்றது,

**தனி ஆவர்தனத்தில் கொன்னக்கோல்:-**

கர்நாடக சங்கீதத்தில் முக்கியமாக இடம் பெறுவது தனி ஆவர்தனமாகும். முன்பெல்லாம் கச்சேரிகளில் தனி ஆவர்தனத்தின் போது கொன்னக்கோலே முக்கியமாக இடம் பெற்றது. தனி ஆவர்தனம் ஆரம்பிக்கும் போது முதலில் கொன்னக்கோல் ஆரம்பித்த பிறகு தான் மற்ற வாத்தியங்களெல்லாம் வாசிக்கப்படும்.

ஆதி தாள தனி ஆவர்த்தன பாடலின்
8 மாத்திரை சொற்க்கட்டு.

4 4 4 4

தத்தின் தின்னாகிடதகதின் தின்னா

4 4

தத்தின் தின்னா

| 2 | 2 | 2 | 2 | |
|---|---|---|---|---|
| திந்தத் தளாங்கு | தகதக | தளாங்கு | | - 2 |

ஆதி தாள தனி ஆவர்தனம் துவங்கும் போது தத்தின் தின்னா என்ற கீழ்கால நடையுடன் எட்டுமாத்திரை பரண் சொற்க்களுடன் இணைந்து சொல்ல வேண்டும் இதனை சற்று கால ப்ரமாணம் இழுத்து கொன்னக்கோல் சொல்ல வேண்டும். இதனை தாளம் ஓடாமல் இருக்கவும் சற்று காலப்ரமாணம் இழுத்து கொள்வதற்காகவும் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

**கொன்னக்கோல் ஓர் உப பக்கவாத்யம்:**

கொன்னக்கோல் என்பது கர்நாடக சங்கீதத்தில் பயன்படுத்தப்படும் ஒரு உப பக்கவாத்தியமாகும். இதற்கு கலைஞர்களின் குரலே இசைக்கருவியாக பயன்படுத்தப்படுகிறது. அதாவது வாயால் உச்சரிக்கப்படும் தாள லயம் அல்லது வாயால் சொற்க்கட்டுக்களுடன் வாசிப்பது கொன்னக்கோல் ஆகும். கொன்னக்கோல் என்றால் அளவுடன் சொல்வது என்றூ பொருளாகிறது. ஒரு இசைக்கச்சேரியில் அழகை மேம்படுத்துவதற்கு பக்க வாத்தியங்களுடன் கடம் கஞ்சிரா மோர்சிங் கொன்னக்கோல் போன்ற உப பக்க வாத்தியங்கள் பயன்படுத்தப்படுகின்றன. வாய்பாட்டு கலைஞர்கள் பல்லவியை பாடி முடிக்கும் தருணத்தில் அவர்களுடன் இணைந்து தாள லயத்துடன் கொன்னக்கோல் சொல்வார்கள். பொதுவாக கொன்னக்கோலின் பிறப்பிடம் என்று பார்த்தால் அது நட்டுவாங்கம் தான். ஆனால் நட்டுவாங்கத்தில் பயன்படுத்தப்படும் சொற்க்கட்டுக்கள் கொன்னக்கோலில் இடம் பெறுவதில்லை.

**தவிலில் கொன்னக்கோல்:-**

மிருதங்கத்தில் எப்படி கொன்னக்கோல் என்ற ஒருமுறை பழக்கத்தில் இருந்ததோ அது போல தவிலிலும் கொன்னக்கோல் சொல்லும் பழக்கம் இருந்து வந்துள்ளது. ஆனால் வாய்ப்பாட்டு வாத்யக் கச்சேரிகளில் மிருதங்கத்துடன் இணைந்து கொன்னக்கோல்க்கு முதலிடம் கொடுக்கப்பட்டது போல நாதஸ்வர கச்சேரிகளில் தவிலுடன் இணைந்து கொன்னக்கோலுக்கு முதலிடம் கொடுத்தாக தெரியவில்லை. ஆனால் குருகுல முறையில் படிக்கும் போது முதலில் கைகளில் தாளம் போட்டு சொல்லி பழகிய பின்பு தான் தவிலில் வாசித்துப் பழக வேண்டும். இன்னும் தவில் பாடங்களை பாடம் செய்து வைத்துக் கொண்டு கையில் தாளம் போட்டு பாடங்களை சொல்லி வருகின்றனர். இதுபோல மிருதங்க ஜதி சொற்க்களுக்கும் தவில் ஜதி சொற்க்களுக்கும் சிறு சிறு வித்யாசங்கள் உண்டு. அவை பாடத்திற்கும் உள்ள வித்யாசம் ஆகும். இரண்டு பாடங்களும் ஒன்றாகவே இருந்தாலும் உச்சரிப்பு முறையில் சிறு சிறு வித்யாசங்கள் காணப்படும். அந்த காலத்தில் மன்னார்குடி பக்கிரியாப்பிள்ளை இவர் ஒரு தவில் வித்வான் ஆவார். இவர் காஞ்சிபுரம் நயினாப்பிள்ளை இசை நிகழ்ச்சியில் கொன்னக்கோல் இசைத்துள்ளார்.

காஞ்சிபுரம் நயினாப்பிள்ளை – பாட்டு

மன்னார்குடி பக்கிரியாப்பிள்ளை - கொன்னக்கோல்

புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி – கஞ்சிராபிள்ளை.

இப்படி ஒரு குழுவாக இசை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளனர்.

**பழங்காலத்தில் கொன்னக்கோல்:**

முந்தைய காலங்களில் அதாவது 19 – ம் நூற்றாண்டில் முதன் முதலில் பக்கிரியாப்பிள்ளை (தவில் கலைஞர்) அவர்கள் காஞ்சிபுரம் நயினா பிள்ளையின் இசை நிகழ்ச்சியில் கொன்னக்கோல் வாசித்துள்ளார்.

காஞ்சிபுரம் நயினா பிள்ளை – பாட்டு

பக்கிரியாப் பிள்ளை – கொன்னக்கோல்

அழகம்பியா பிள்ளை – மிருதங்கம்

புதுக்கோட்டை தெட்சிணாமூர்த்தி பிள்ளை – கஞ்சிரா

இப்படி ஒரு குழுவாக இசை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளனர். பக்கிரியாப்பிள்ளை அவர்களுக்கு பிறகு மிருதங்க வித்வான் வேலூர் ராம பத்திரன் அவர்களின் தந்தை கோபால் அய்யங்கார் அவர்கள் கொன்னக்கோல் வாசித்துள்ளார். மன்னார்குடி பக்கிரியாப்பிள்ளை அவர்கள் மகன் மன்னார்குடி வைத்தியலிங்கம்பிள்ளை அவர்களும் கொன்னக்கோல் வாசித்துள்ளார்.

கொன்னக்கோல் வாசிக்க பாட்டு அவசியம் தெரிந்திருக்க வேண்டும். ஸ்ருதியுடன் சேர்த்து தான் கொன்னக்கோல் இசைக்க வேண்டும்.

**கொன்னக்கோலின் இன்றைய நிலை:**

கொன்னக்கோல் என்ற மரபு இன்றைய நிலையில் திரைஇசை வாயிலாகவும் சில. மிருதங்க கலைஞர்கள் மூலமாகவும் இன்று நம்மிடையே வலம் வந்து கொண்டிருக்கிறது. இது போல கடம் வித்வான் விக்கு விநாயக ராம் அவர்கள் தன்னுடைய இசை நிகழ்ச்சிகள் பெரும்பாலனவற்றில் கொன்னக்கோலை பயன்படுத்தி இசை நிகழ்ச்சிகள் நடத்தி வருகிறார். அது போல திரைத் துறையிலும் கொன்னக்கோல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. படையப்பா படத்தில் வரும் மின்சார பூவே என்ற பாடலில் கடைசியில் பல கொன்னக்கோல் கோர்வைகள் இடம் பெற்றிருக்கின்றன.

1. திஸ்ர அட்சரம் - தொம் தகிட தக்கிடதக தத்தின்ன

    ததீகிட தொம் தாங்கு
    ததீகிட தொம் தாங்கு
    ததீகிட தொம்

அதுபோல் திரு காரைக்குடி மணி அவர்கள் லய கவிதை ஒன்றை அமைத்து இசை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார்.

(உ.ம்)

கலைமகள் கடைவிழி அருளுக குருவடி சரணடைவோம்
தகதின தகதின தகதின தகதின தொம்

அதே போல திரு. மணியம் என்பவர் மிருதங்க கலைஞர் மற்றும் கொன்னக்கோல் கலைஞர் இவர் திருக்குறளுக்கு கொன்னக்கோல் அமைத்துள்ளார்.

(உ.ம்)

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவான் முதற்றே உலகு.

3 3 3 4 3
தகிட தகிட தத்த தா தொங்கு - 16

3 4 3 4 2 2
தாங்கு தக தாங்கு தாக்கிடு தக தாம் - 16

இந்த குறளில் முதல் வரி 16 மாத்திரை சொல் வறுமாறு உள்ளது. அதேபோல 2 – ம் வரியும் 16 மாத்திரை சொல் வருமாறு அழகாக பிரிக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை:-**

தமிழர்கள் வாழ்க்கையில் இசையும் இசையமைந்த பாடல்களும் அதற்க்குரிய தோற்க்கருவிகளும் பண்டைய காலத்தில் இருந்தே சிறப்பாக நிலவி வந்துள்ளன. இடைக்காலத்தில் தொய்வு ஏற்ப்பட்டு இருந்தாலும் பக்தி இலக்கியம் தோன்றிய பிறகு இடைக்கலை மெய் ஞானத்தை உணர்த்துவதற்கு முழுவதும் இசை பயன்பட்டது என்பதை சேக்கிழார் பெரியபுராணத்தில் பதிவு செய்கிறார். அதுபோல கொன்னக்கோல் என்ற முறையானது இடைக்காலத்தில் தோன்றியது. இதை நாம் திருஞானசம்பந்தரின் பாடல்களில் இருந்தும் அருணகிரிநாதரின் திருப்புகழில் இருந்தும் நாம் அறிய முடிகிறது. இவர்களுடைய காலங்களுக்கு பிறகு இந்த சொற்க்கட்டுக்களெல்லாம் கொன்னக்கோலாக மாறி தத்தக்காரமாகவும் உருப்பெற்றன. அதன் பிறகு இந்த கொன்னக்கோல் முறையை கச்சேரியில் ஒரு தனி இடமாக அமைத்து வளர்ச்சியடைய செய்தனர். இந்த கொன்னக்கோல் முறையை புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி பிள்ளை , மன்னார்குடி பக்கிரியாப்பிள்ளை , திருச்சி ரவீந்திரன், மன்னார்குடி என் ஆறுமுகம் போன்ற லய மேதைகள் நமக்காக இந்த கொன்னக்கோல் மரபை நமக்காக விட்டு சென்றுள்ளனர். காலப்போக்கில் இந்த மரபு நலிவுற்று இருந்தாலும் தற்போது திருச்சி ஆர். தாயுமாணவர் மற்றும் அவர்களுடைய சீடர்கள் மூலமாகவும் காரைக்குடி மணி மற்றும் விக்கு விநாயகராம் திரு. மணியம் போன்ற கலைகளுர்கள் மூலமாகவும் இந்த கொன்னக்கோல் மரபு நம்மிடையே வலம் வந்து கொண்டிருக்கிறது என்பதில் எந்த வித ஐயமுமில்லை.

**துணை நூற் பட்டியல்**

அபூர்வ ராகம் – ஜனவரி – 2017
ISSN 2395 – 2202 – Page – 17
தவில் கற்பிக்கும் பாடமுறை
T. G. பாபு - Page – 16.
தாளமும் அனுபவமும்
தமிழ் இசை சங்க வெளியீட்டு
சென்னை – முதற்பதிப்பு – 1971
வைத்தியலிங்கம் பிள்ளை
திருப்புகழ் சுர தாள குறிப்புடன்
தமிழிசை பாடல்கள் பத்தொன்பதாம் தொகுதி
அண்ணாமலை பல்கலை கழகத்து
இசைத்தமிழ் வெளியீடு - 1952